## வாழும் உலகம் 1

1. பின்வருவனவற்றுள் வைரஸ்களைப் பற்றிய சரியான கூற்று எது?
   a) வளர்சிதைமாற்றத்தைக் கொண்டுள்ளன
   b) நிலைமாறும் ஒட்டுண்ணிகளாகும்
   c) DNA அல்லது RNA -வை கொண்டுள்ளன.
   d) நொதிகள் காணப்படுகின்றன
2. கீழ்க்கண்டவற்றுள் எந்த தொகுப்பு முறையியல் சரியானது?
   a) பிரிவு, வகுப்பு, வரிசை, பேரினம், குடும்பம், சிற்றினம்
   b) பிரிவு, வகுப்பு வரிசை, குடும்பம், பேரினம், சிற்றினம்
   c) பிரிவு, வரிசை, குடும்பம், வகுப்பு, சிற்றினம், பேரினம்
   d) பிரிவு, வகுப்பு, பேரினம், குடும்பம், சிற்றினம்
3. ஒத்த பண்புகளையும் அமைப்பினையும் கொண்ட நெருக்கமான தொடர்புடைய உயிரினங்களின் கூட்டம் இவ்வாறு அழைக்கப்படுகிறது
   a) பேரினம் b) குடும்பம் c) சிற்றினம் d) வரிசை
4. ஒத்த பண்புகளின் தரத்தைப் பெற்ற உயிரினக்குழு
   a) சிற்றினம் b) வகைப்பாட்டுத் தொகுதி c) பேரினம் d) குடும்பம்
5. கீழ்க்கண்டவற்றுள் ஹவுரா தாவரவியல் பூங்கா அமைந்துள்ள இடம்?
   a) தேசிய தாவரவியல் பூங்கா b) இந்திய தாவரவியல் பூங்கா
   c) லால்பேக் பூங்கா d) சர்வதேச தாவரவியல் பூங்கா
6. எந்த வகைப்பாட்டு கருவி டாக்சான் பற்றிய முழுவிவரங்களைக் கொண்டுள்ளது.
   a) வகைப்பாட்டுத் திறவுகோல் b) ஹெர்பேரியம் c) தாவரம்
   d) மோனோஃகிராப்
7. உடலில் பல வகை கால்வாய் அமைப்புகளை பண்புகளாக கொண்ட தொகுதி
   a) தட்டைப்புழு இனம் b) முட்தோலிகள் c) துளையுடலிகள்
   d) வளைத்தசையுடலிகள்
8. தண்டுவடம் மற்றும் முதுகுப் புறத்தில் வெற்று குழல் போன்ற நரம்பு மண்டலம், ஆகியவற்றை பண்புகளாக கொண்ட தொகுதி
   a) கார்டேட்டா b) சீலன்டெரேட்டா (குழியுடலிகள்) c) புரோகார்டேட்டா
   d) பொரிஃபெரா (துளையுடலிகள்)
9. வகைப்பாட்டியலின் அடிப்படை அலகு
   a) சிற்றினம் b) பேரினம் c) குடும்பம் d) தொகுதி
10. பயன்தரும் பாக்டீரியாக்கள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன.
    a) நோயூக்கி பாக்டீரியா b) புரோபயோட்டிக் c) சயனோ பாக்டீரியா
    d) பிளாஸ்மிட்
11. கிளோடோகிராம் என்னும் மன வரைபடத்தினை அறிமுகப்படுத்தியவர்
    a) அரிஸ்டாட்டில் b) R.H. விட்டேக்கர் c) எர்ணஸ்ட்
    d) கரோலஸ் லின்னயஸ்
12. பல்லுயிர் தன்மை என்ற பதத்தைச் சூட்டியவர் யார்?

**NEET TEST SERIES FIRST 7 DAYS TOPICS ( FROM 3 DEC 2024 TO JAN 31ST 2025)**

**TOTALLY 5O DAYS 100 TESTS - THIS 100 TESTS GROUP FEES RS.500 ONLY**

**ENGLISH / TAMIL MEDIUM (NOT SAME PAPERS)**

| | |
|---|---|
| 1) | 1 LIVING WORLD Q 1 PHYSICAL WORLD AND MEASUREMENT QA<br>1 இயல் உலகத்தின் தன்மையும் அளவீட்டாலும் 1Q 1 வாழும் உலகம் 1Q |
| 2) | 2 BIOLOGICAL CLASSIFICATION Q 2 KINEMATICS QA<br>2 உயிரியல் வகைப்பாடுகள் 1Q 2 வேலை ஆற்றல் திறன் Q |
| 3) | 3 CHEMICAL BONDING AND MOLECULAR STRUCTURE A 3 PLANT KINGDOM Q<br>3 இயக்கவியல் Q 3 வேதிப்பிணைப்பும் மூலக்கூறு அமைப்பும் 1Q |
| 4) | 4 ANIMAL KINGDOM Q 4 CLASSIFICATION OF ELEMENTS AND PERIODICITY IN PROPERTIES<br>4 உயிர் மூலக்கூறுகள் 1 Q 4 சில அடிப்படை தத்துவங்கள் மற்றும் உத்திகள் 1Q |
| 5) | 5 ELECTROCHEMISTRY A 5 MOTION OF SYSTEM OF PARTICLES ANDRIGID BODY A<br>5 செல் சுழற்சி மற்றும் செல் பகுப்பு 1Q 5 அணு அமைப்பு 1Q |
| 6) | 6 EQUILIBRIUM A 6 GRAVITATION QA<br>6 ஈர்ப்பியல் Q 6 ஹைட்ரஜன் 1Q |
| 7) | 7 PROPERTIES OF BULK MATTER QA 7 CHEMICAL KINETICS QA<br>7 பருப்பொருள்களின் பண்புகள் Q 7 ஹைடிரோகார்பன் 1Q |

**FEBRUARY 1 TO MARCH 25 2025 NO NEET TESTS UPLOAD IN MY GROUPS**

**MARCH 26 TO MAY TILL EXAM NEW TEST GROUP START**

**40 DAYS PLAN – 3 FULL TEST PERDAY – 120 TESTS (GROUP FEES RS.1000)**

**Join my paid whatsapp test group with answers** | **8056206308**

a) வால்டர் ரோஸன் b) எ.ஜி.டான்ஸ்லே c) அரிஸ்டாடில்
d) எபி.டி.காண்டோல்

13. மாமரத்தின் உயிரியல் பெயர்
a) டிரைடாக்ஸ் புரோகும்பன்ஸ் b) ஹீலியான்தஸ் டியூபெரோசஸ்
c) ஏபிஸ் மெல்லிபெரா d) மேங்க்னிபெரா இன்டிகா

14. கீழ்கண்டவற்றுள் எந்த வாக்கியம் வகைப்பாட்டு படிநிலையில் தவறானது?
a) ஏழு படிநிலைகள் மற்றும் 21 இடைநிலை படிகளையும் கொண்டது
b)
வகையினம் அதிகரிக்கும் பொழுது அதன் பொதுவான பண்புகளும் அதிகரிக்கிறது
c) பல்லுயிரியல்பு, உயர் வகையினத்திலிருந்து கீழ் வகையினத்தில் குறையும்
d) சிற்றினத்தின் அடிப்படை அலகு

15. அரும்புதல் முறையில் இனப்பெருக்கம் எந்த உயிரினங்களில் காண முடிகிறது?
a) ஈஸ்ட் b) ஹைட்ரா c) ஈஸ்ட் மற்றும் ஹைட்ரா d) பூஞ்சைகள்

16. புலி, பூனை மற்றும் நாய் எந்த வரிசையை சார்ந்தவை?
a) உயர் விலங்கினம் b) ஊன் உண்ணிகள் c) வௌவால் இனம்
d) பூச்சி உண்ணிகள்

17. தரத்தைப் பற்றி கருதாமல், வகைப்பாட்டின் ஒவ்வொரு அலகு
a) டாக்சான் b) வகை c) சிற்றினம் d) ஸ்ட்ரெயின்

18. ஒரே மாதிரியான தோற்றமுள்ள, தொடர்புடைய பண்புகளை கொண்ட உயிரினங்கள் இவ்வாறு அழைக்கப்படும்.
a) பேரினம் b) குடும்பம் c) வரிசை d) பிரிவு

19. உயிரினங்களுக்கு பெயரிடும் முறை இவ்வாறு அழைக்கப்படுகிறது.
a) கண்டறிதல் b) வகைப்பாடு c) பெயரிடுதல் d) ஐ.சி.பி.என்

20. கீழ்க்கண்டவற்றுள் எந்த உயிரினம் சரியாக பெயரிடப்பட்டு பன்னாட்டு பெயரிடல் முறை சட்டங்களுக்கு உட்பட்டு அச்சடிக்கப்பட்டு சரியாக விவரிக்கப்பட்டுள்ளது.
a) மஸ்கா டொமஸ்டிகா - பொதுவாக காணப்படும் வீட்டு பல்லி, ஊர்வன
b)
பிளாஸ் மோடியம் பால்சிபெரம் - மலேரியா காய்ச்சலை உருவாக்கும் ஒரு வகை புரோட்டோசோவா நோய் கிருமி
c) பெலிஸ் டைகிரிஸ் - கிர் காடுகளில் பாதுகாக்கப்படும் இந்திய புலி
d)
E.coil -மனிதனின் குடலில் காணப்படும் பொதுவான பாக்டீரியா, எண்டமீபா கோலி

21. இரு பெயரிடும் முறையை முதலில் அறிமுகப்படுத்தியவர்
a) அரிஸ்டாட்டில் b) கரோலஸ் லின்னேயஸ் c) கேஸ்பர்டு பாகின்
d) ஹிப்போகிரட்டஸ்

22. கீழ்க்கண்டவற்றுள் இது விலங்குகளுக்கான வகைப்பாட்டுக் கல்விக்கான கருவியாகும்.
a) ஹெர்பேரியம் b) அருங்காட்சியகம் c) டி.என்.ஏ கலப்பு ஆக்கம்
d) டி.என்.ஏ வரிக்குறியீடு

23. வகைப்பாட்டின் ஒவ்வொரு அலகும் இவ்வாறு அறியப்படுகிறது
a) தொகுப்பு b) ரெகான் c) படிநிலை d) இனத்தொடர்பு தொகுப்பமைவு
24. நீலப்பசும் பாசிகளோடு தொடர்புடைய சரியான கூற்று எது?
a) நகர்வதற்கான உறுப்புகள் இல்லை.
b) செல்சுவரில் செல்லுலோஸ் காணப்படுகிறது
c) உடலத்தைச் சுற்றி மியூசிலேஜ் காணப்படுவதில்லை
d) ஃபுளோரிடியன் தரசம் காணப்படுகிறது.
25. நாய்கள் எந்த குடும்பத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது?
a) கேனிடேட b) பேலிடே c) கையிரோப்டிரா d) ஹோமினிடே
26. வகைப்பாட்டில் குடும்பம் என்பது பல்வேறு _______ உள்ளடக்கியது.
a) சிற்றினம் b) வரிசை c) பேரினம் d) தொகுதி
27. லின்னேயஸின் கண்டுபிடிப்பு
a) இரு பெயரிடுதல் முறை b) உயிரினத் தோற்றம் பற்றிய கோட்டுபாடு
c) நுண்ணோக்கி கண்டுபிடிப்பு d) இரத்த சுழற்சி கண்டுபிடிப்பு
28. விலங்குகளை கண்டு உணரவும், கற்கவும் பயன்படுவது.
a) விலங்கியல் பூங்கா b) அருங்காட்சியகம் c) கடல் பூங்கா
d) சரணாலயம்
29. உயிரினங்களை வகைப்படுத்துதல், அடையாளம் கண்டறிதல் மற்றும் பெயரிடுதல் போன்றவற்றை விவரிக்கும் அறிவியலின் ஒரு கிளை
a) உடற்கூறியில் b) இனத்தொடர்பு தொகுப்பமைவு c) உடற்செயலியல்
d) உயிரணுவியல்
30. கீழ்க்கண்டவற்றுள் எது அருங்காட்சியத்தோடு தொடர்பு அற்றது?
a) பூச்சிகள், பூச்சி பெட்டிகளில் வைக்கப்பட்டிருக்கும்
b) காய்ந்த மாதிரிகள் பதப்படுத்தப்பட்டிருக்கும்
c) மாதிரிகள் பதப்படுத்துவதற்கான கரைசலில் வைக்கப்பட்டிருக்கும்
d)
விலங்குகள் மனிதனின் பாதுகாப்பில் பாதுகாக்கப்பட்ட சூழலில் வளர்க்கப்படும்
31. ICBN என்பதன் விரிவாக்கம்
a) பன்னாட்டு தாவரவியல் பெயரிடும் முறை சட்டம்
b) இந்திய உயிரின பெயரிடும் முறை
c) பன்னாட்டு தாவரவியல் மாநாடு பெயரிடும் முறை
d) பன்னாட்டு தாவரவியல், கூட்ட பெயரிடும் முறை
32. மனிதனின் விலங்கியல் பெயர்
a) ஈகுஸ் ஈகுஸ் b) ஹோமோ செப்பியன்ஸ் c) மஸ்கா டொமஸ்டிகா
d) பேந்தரா டைகிரிஸ்
33. பூஞ்சைகள் எவ்வாறு பெருக்கமடைந்து பரவுகிறது?
a) பாலில்லா ஸ்போர்ஸ் b) அரும்புதல் c) பால் அணுக்கள்
d) மீளுருவாக்கம்
34. கிளாடோகிராம் என்பது கீழ்க்கண்ட பண்புகளைக் கொண்டுள்ளது.
a) உடற்செயலியல் மற்றும் உயிர்வேதியியல்
b) பரிணாமப் பண்புகள் மற்றும் மரபுவழிப் பண்புகள்

c) பல்லுயிர் தன்மை மற்றும் இனத்தொடர்பு தொகுப்பமைவு
d) மேற்குறிப்பிட்ட ஏதுமில்லை

35. பின்வருவனவற்றுள் எது தவறானது?
a)
அருங்காட்சியகம் தாவர மற்றும் விலங்குகளின் புகைப்படங்களை உள்ளடக்கியது
b)
அடையாளக் குறியீடு (key) என்பது உயிரின மாதிரிகளை கண்டறியப் பயன்படுகிறது
c)
ஹெர்பேரியம் என்பது உலர்த்தப்பட்ட அழுத்தி வைக்கப்பட்டு தாவர மாதிரிகள்
d) தாவரப் பூங்கா என்பது உயிருள்ள தாவரங்களின் தொகுப்பு ஆகும்

36. வன விலங்குகள், மனிதனின் பராமரிப்பில் மனிதனால் உருவாக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட வனத்தில் பராமரித்து வைக்குமிடம் ________ எனப்படும்.
a) விலங்கியல் பூங்கா b) அருங்காட்சியகம் c) தாவரவியல் பூங்கா
d) ஹெர்பேரியம்

37. கீழ்கண்டவற்றுள் எந்த உயிரினங்களால் இனப் பெருக்கம் செய்ய இயலாது?
a) இராணி தேனீ b) கோவேறு கழுதை c) ஆண் தேனீ d) குதிரைகள்

38. பதப்படுத்தப்பட்ட தாவர மற்றும் விலங்கு மாதிரிகளை படிப்பதற்காக தொகுத்து வைத்திருக்கும் இடம் ________ எனப்படும்.
a) ஹெர்பேரியம் b) தாவரவியல் பூங்கா c) அருங்காட்சியகம்
d) மிருகக்காட்சி சாலை

39. ஒரு குறிப்பிட்ட பகுதியில் காணப்படும் தாவரங்களைப் பற்றியும் அதன் வாழிடம் பற்றியும் தொகுக்கப்பட்ட தகவல்கள் ________ எனப்படும்.
a) தாவர குறிப்புகள் b) விலங்கு குறிப்பு c) அட்டவணை d) கையேடுகள்

40. கீழ்க்கண்டவற்றுள் எந்த வகைப்பாட்டியல் சாதனம் ஏதாவதொரு பெயரினத்தையோ அல்லது குடும்பத்தையே பற்றிய முழு தகவல்களையும் தரவல்லது?
a) அடையாள குறியீடு b) தாவரக் குறிப்பு c) ஹெர்பேரியம்
d) தனிக் கட்டுரை

41. வகைப்பாட்டின் பைலோஜெனடிக் அமைப்பு எதனை பொறுத்து அமையும்?
a) மேற்புறத்தி தோற்ற பண்புகள் b) வேதிப் பொருட்கள்
c) தாவரப் பண்புகள் d) பரிணாம வளர்ச்சி தொடர்புகள்

42. ஆண் புலியை பெண் சிங்கத்துடன் இனக்கலப்பில் ஈடுபடுத்தும் போது _________ உருவாகிறது.
a) டைகான் b) கோவேறு கழுதை c) ஹின்னி d) லைகர்

43. உயிரினங்களில் உடல் அளவு அதிகரிப்பது எவ்வாறு கூறப்படுகிறது?
a) வளர்ச்சி b) இனப்பெருக்கம் c) வளர்சிதை மாற்றம் d) ஊட்டச்சத்து

44. கீழ்கண்டவற்றுள் எது சரியான வகைப்பாடு?
a) பிரிவு → வகுப்பு → வரிசை → பேரினம் → குடும்பம் → சிற்றினம்
b) பிரிவு → வகுப்பு → வரிசை → குடும்பம் → பேரினம் → சிற்றினம்

c) பிரிவு → வரிசை → குடும்பம் → வகுப்பு → சிற்றினம் → பேரினம்
d) வகுப்பு → பிரிவு → குடும்பம் → பேரினம் → சிற்றினம்

45. உடலில் நடைபெரும் வேதிவினைகள் அனைத்தும் _______ எனப்படும்.
a) வளர்சிதை மாற்றம் b) வளர்ச்சி c) முன்னேற்றம்
d) மாறுபாடு அடைதல்

46. ஒரு தொகுப்பை பற்றி விவரிக்கும் தொகுப்பியல் சாதனம்
a) தனிக்கட்டுரைகள் b) கையேடுகள் c) தாவரக் குறிப்புகள் d) பட்டியல்

47. லிஸ்டமா நேச்சுரே எனும் புத்தகக்கத்தை எழுதியவர்?
a) லின்னேயஸ் b) அரிஸ்டாட்டில் c) ஹிப்போகிராட்டஸ் d) டார்வின்

48. வரையறுக்கப்பட்ட பெயர்களின் முக்கியத்துவம்?
a)
ஒரு உயிரினத்தின் பெயர் வேறு எந்த உயிரினத்துக்கும் பயன்படுத்தப்படவில்லை என்பதை உறுதி செய்கிறது.
b) உலக மக்களால் எளிதில் அடையாளம் காண ஒரே பெயர் உதவுகிறது
c) ஒவ்வொரு உயிரினத்திற்கும் ஒரு பெயரை வழங்குவது
d) மேற்கூறிய அனைத்தும்

49. பூனை இனம் எந்த குடும்பத்தை சேர்ந்தது?
a) கேனிடே b) பேலிடே c) கையிரோப்டிரா d) ஹோமினிடே

50. மூலக்கூறு வகைப்பாட்டின் கருவியில் இது அடங்கியுள்ளது.
a) டி.என்.ஏ & ஆர்.என்.ஏ
b) மைட்டோகான்டிரியா மற்றும் எண்டோ பிளாசவலை
c) செல்சுவர் மற்றும் பிளாஸ்மா புரோட்டின் d) மேற்கூறிய அனைத்தும்

51. முப்பெயரிடும் முறையில் காணப்படுவது.
a) தொகுதி b) வரிசை c) துணை சிற்றினம் d) டாட்டோனைமி

52. கிழ்கணடவற்றுள் எவை ஒரு தொகுப்பை பற்றி மட்டும் விவரிக்கிறது?
a) கையேடு b) தனிக்கட்டுரை c) பட்டியல் d) தாவரக் குறிப்பு

53. பெற்றோர் உயிரினத்தில் இருந்து புதிய சந்ததிகள் பெற்றோரை ஒத்த பண்பு நலன்களோடு உற்பத்தியடைவது கீழ்கண்டவாறு அழைக்கப்படுகிறது.
a) வளர்ச்சி b) இனப்பெருக்கம் c) வளர்சிதை மாற்றம்
d) பெருக்கமடைதல்

54. இனத்தொடர்பு தொகுப்பமைவு என்பது
a) உயிரினங்களை வகைப்படுத்துவது என்பது
b) உயிரினங்களை இனம் கண்டறிவது மட்டும்
c)
உயிரினங்களுக்கு இடையேயான பரிணாம வளர்ச்சி தொடர்புகளை பற்றியது
d)
பெயரிடுதல் தவிர கண்டறிதல், வகைப்படுத்துதல் மற்றும் பரிணாம வளர்ச்சி தொடர்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியது

55. தாவரங்கள் சேகரிக்கப்பட்டு, அழுத்தி, தாளில் ஒட்டபட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதாவதொரு வகைப்பாட்டின் படி வரிசைப்படுத்தப்பட்ட தொகுப்பு ________ எனப்படும்

a) அருங்காட்சியகம்   b) ஹெர்பேரியம்   c) தாவரவியல் பூங்கா
d) விலங்கியல் பூங்கா

56. தாவரவியல் பூங்காவின் மிக முக்கியமான செயல்பாடு
a) சிறந்த பொழுதுபோக்கு பகுதியாக உள்ளது
b) வெப்ப மண்டல தாவரங்களை பற்றி அறிய உதவுகின்றது
c) அழியும் தருவாயில் உள்ள தாவரங்களின் ஜெர்ம் பிளாசத்தை பாதுகாப்பது
d) வன உயிரினங்களுக்கு இயற்கை வாழிடமாக விளங்குகிறது

57. கீழே கொடுக்கப்பட்டுள்ள அ முதல் ஈ வரையுள்ள வாக்கியங்களை வாசித்து அவற்றில் சரியான இரண்டு வாக்கியங்களை தேர்ந்தெடு.
அ. உயிரினங்கள் பற்றிய வரையறைகள் ஏர்ன்ஸ்ட் மேயர் என்பவரால் கொடுக்கப்பட்டது
ஆ. ஒளியின் கால அளவு, தாவரங்களில் இனப் பெருக்கத்தை பாதிப்பதில்லை
இ. இருயெரிடம் முறை R.H விட்டேக்கர் என்பவரால் வரையறுக்கப்பட்டது
ஈ. ஒரு செல் உயிரிகளில் வளர்ச்சி என்பதும் இனப்பெருக்கம் என்பது ஒன்றாகவே கருதப்படுகிறது
a) ஆ மற்றும் இ   b) இ மற்றும் ஈ   c) அ மற்றும் ஈ   d) அ மற்றும் ஆ

58. சிற்றினத்தின் உயிரியல் கோட்பாடு எதை பொறுத்தது?
a) புவியியல் தனித்தன்மை   b) இனப்பெருக்க தனித்தன்மை
c) உருவ தனித்தன்மை   d) உடற் செயலியல் தனித்தன்மை

59. மஸ்கா டொமஸ்டிகா எந்த வகுப்பை சார்ந்தது?
a) பூச்சியினம்   b) மனித குரங்கினம்   c) பறவையினம்   d) இனம்

60. உயிரினத்தை முதன் முதலில் கண்டறிந்தவரின் பெயரை அறிவியல் பெயருக்கு பின்னால் சுருக்கமாக எழுதப்படுவது இவ்வாறு அழைக்கப்படுகிறது.
a) வகைப்பாடு   b) கண்டறிதல்   c) ஆசிரியர் சான்று   d) பெயரிடுதல்

61. பல செல் உயிரினங்களில் வளர்ச்சியானது இவ்வாறு நடைபெறுகிறது
a) செல் பிரிதல்   b) செல் மாறுபாடடைதல்   c) செல் இழத்தல்
d) வளர்சிதை மாற்றம்

62. உடலில் இழந்து போன பாகமானது மீண்டும் வளர்வது இவ்வாறு அழைக்கப்படுகிறது
a) வளர்ச்சி   b) இனப்பெருக்கம்   c) மீளுருவாக்கம்   d) வளர்சிதை மாற்றம்

63. ஒரு குறிப்பிட்ட பகுதியில் வளரும் தாவரங்களை பற்றிய முழு குறிப்புகளையும் வழங்குவது?
a) தாவரக் குறிப்பு   b) கையேடு   c) தனிக்கட்டுரை   d) பட்டியல்

64. உயிருள்ளவை உயிரற்றவைகளிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன?
a) இனப்பெருக்கம்   b) வளர்ச்சி   c) வளர்சிதை மாற்றம்   d) இடப்பெயர்ச்சி
e) கொடுக்கப்பட்ட அனைத்தும்

65. தாவரங்களுக்கு அறிவியல் பெயரிடும் முறை லின்னேயஸின் எந்த புத்தக வெளியீட்டிலிருந்து தொடங்கியது?
a) ஜெனீரா பிளாண்டாராம்   b) சிஸ்டமா நேச்சுரே   c) சிற்றின் பிளாண்டாரம்
d) சரஹா சங்கீதா

66. ஏழுலக வகைப்பாட்டு முறையை உருவாக்கியவர்_________.

a) கார்ல் வோயிஸ் b) R.H.விட்டேக்கர் c) ஜான் ரே d) கேவலியர் ஸ்மித்

67. கீழ்கண்டவற்றுள் எவ்வகைப் பண்பு எல்லா உயிரினங்களிலும் காணப்படுகிறது?
a) வளர்ச்சிதை மாற்றம் மற்றும் உணர்வு b) இனப்பெருக்கம் c) வளர்ச்சி
d) நகர்தல்

68. யூகேரியா என்பது இதனை உள்ளடக்கியது ________
a) சையனோபாக்டீரியா b) யூகேரியோட்டுகள் c) மெத்தனோஜென்கள்
d) யூபாக்டீரியா

69. ஆர்க்கிபாக்டீரியம் எது?
a) அசட்டோபாக்டர் b) எர்வினீயா c) டிரிப்போனிமா
d) மெத்தனோ பாக்டீரியம்

70. சரியான வாக்கியத்தை தேர்ந்தெடு.
a) கிளாடோகிராம் என்பது வகைப்பாட்டு மரம்
b) கிளாஸ்டிக் வகைப்பாட்டு என்பது பரிணாம வகைப்பாடு
c) புரோபையோடிக் பாக்டீரியா நோய்களை ஏற்படுத்தும்
d) வகைப்பாட்டு படிநிலைகள் மொத்தம் ஒன்பது

71. கீழ்க்கண்டவற்றுள் எது சமதரத்தில் இல்லை
a) பிரைமேட்டா b) ஆர்த்தோப்டீரா c) டிப்டிரா d) இன்செக்டா

72. கீழ்கண்டவற்றுள் எந்த உயிரினம் துண்டாதல் முறையில் பெருக்கமடைகிறது?
a) பூஞ்சைகள் b) நாரிழையுடன் பாசிகள் c) புரோட்டோனீமா நொதிகள்
d) மேற்கூறிய அனைத்தும்

73. ஜெனீரா பிளாண்டாரம் எனும் புத்தகத்தை எழுதியவர்
a) எங்கலர் & பிராண்டில் b) பெந்தம் & ஹீக்கர் c) பெஸ்ஸி d) ஹட்சின்சன்

74. உண்மையான மீளுருவாக்கம் காணப்படும் உயிரினம்.
a) ஈஸ்ட் b) ஹைட்ரா c) டீனியா சோலியம் d) பிளனேரியா

75. கீழ்கண்டவற்றுள் எந்த வரிசை விலங்கினங்களை கொண்டிருக்கும்
a) குரங்கு b) கொரில்லா (அ) மனித குரங்கு
c) கிப்பன் (அ) நீண்ட கைகள் கொண்ட குரங்கு d) இவையனைத்தும்

76. ஒரு உயிரினத்தின் வகைப்பாடு மற்றும் வாழியல் பண்புகளை பற்றி விவரிக்கும் கட்டுரைகள் _______ எனப்படும்.
a) கையேடுகள் b) பத்திரிக்கை c) அகராதி d) தனிக்கட்டுரைகள்

77. கீழ்கண்டவற்றில் எந்த தகவல் ஹெர்பெரியம் தாளில் இடம் பெறாது?
a) சேகரிக்கப்பட்ட தேதி b) சேகரித்தவரின் பெயர் c) உள்ளூர் பெயர்
d) தாவரத்தின் உயரம்

78. கிராம் நேர் பாக்டீரியங்களைப் பற்றிய தவறான கூற்றைக் கண்டறிக.
a) டெக்காயிக் அமிலம் காணப்படுவதில்லை
b) செல்சுவரில் அதிகளவு பெப்டிடோ கிளைக்கான் உள்ளது.
c) செல்சுவர் ஓரடுக்கல் ஆனது
d) லீப்போபாலிசாக்கரைட்டுகள் கொண்ட செல்சுவர்

79. உயிரினங்களை அவற்றின் இனத்தொடர்புகளின் அடிப்படையில் வகைப்படுத்துதல் ________ என்றழைக்கப்படுகிறது.

a) வகைப்பாடு b) கண்டறிதல் c) பெயரிடுதல்
d) தொகுப்பமைவு (அ) வகைப்படுத்துதல்

80. குரோமிஸ்டா உலகம் இவ்வுலக வகைப்பாட்டில் காணப்படுகிறது.
a) மூவுலக வகைப்பாடு b) ஐந்துலக வகைப்பாடு c) ஆறுஉலக வகைப்பாடு
d) ஏழுஉலக வகைப்பாடு

81. கீழ்கண்டவற்றுள் எந்த பண்பு உயிருள்ளவைகளுக்கு மிக முக்கியமானது?
a) தனித்தன்மையான வளர்சிதை மாற்ற செயல்முறைகள்
b) உட்புறமாக மட்டும் வளர்ச்சி அதிகரித்தல்
c)
சுற்று சூழலில் நடைபெறும் நிகழ்வுகளை நுகர்தல் மற்றும் அவற்றை நினைவு கூறும் திறன்
d)
மேற்புறத்தில் துகள்கள் கூட்டமாக படிவதால் ஏற்படும் உட்புற மற்றும் வெளிப்புற வளர்ச்சி அதிகரித்தல்

82. ஒரு வகைப்பாட்டு அலகு என்பது
a) நெருக்கமான தொடர்புடைய குடும்பங்கள் சேர்ந்த கூட்டம்
b) நெருக்கமான தொடர்புடைய சிற்றினங்கள் சேர்ந்த கூட்டம்
c) ஒரு வகையான உயிரினங்கள்
d) வகைப்பாட்டியியலில் ஏதாவதொரு படிநிலை

83. பட்டியல் ஒன்றை பட்டியல் இரண்டுடன் சரியாக பொருத்தி கீழே கொடுக்கப்பட்ட சரியான விடையை தேர்ந்தெடு

| **பட்டியல் I** | **பட்டியல் II** |
|---|---|
| அ. குடும்பம் | (i) டிப்டீரா |
| ஆ. வரிசை | (ii) கணுக்காலிகள் |
| இ. வகுப்பு | (iii) மஸ்கிடே |
| ஈ. தொகுதி | (iv) பூச்சியினம் |

a) அ (iii), ஆ (i), இ (iv), ஈ (ii) b) அ (iii), ஆ (ii), இ (iv), ஈ (i)
c) அ (iv), ஆ (iii), இ (ii), ஈ (i) d) அ (iv), ஆ (ii), இ (i), ஈ (iii)

84. உயிருள்ளவகைகள், உயிரற்றவைகளிருந்து முற்றிலும் வேறுபட்டு காணப்படுவது எந்த திறனை பொறுத்தது?
a) சூழலுடனான தொடர்பு மற்றும் பரிணாம வளர்ச்சி b) இனப்பெருக்கம்
c) வளர்ச்சி மற்றும் நகரும் திறன் d) தொடு உணர்வு திறன்

85. சொலனம், பெட்டுனியா மற்றும் டட்டுரா ஆகியவை எந்த தொகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.
a) மால்வேசி b) பேபேசி c) மியூசேசி d) சொலனேசி

86. நுண்ணுயிரிகள், தாவரங்கள் மற்றும் விலங்குகள் போன்ற பல வகை உயிரினங்கள் பூமியில் வாழ்வது இவ்வாறு அழைக்கப்படுகிறது.
a) உயிர்க்கோளம் b) பல்லுயிரியல்பு c) உயிர் ரிதம்
d) ஒளி வெளியிடும் உயிரினம்

87. கீழ்க்கண்ட இனவிலங்கு கார்னிவோரா வரிசையைச் சார்ந்தது.
a) தவளை b) மீன் c) பறவைகள் d) பூனை

88. பின்வருவனவற்றில் எந்த விலங்குகள் அதன் தொகுப்பு முறையோடு சரியாக பொருந்தியுள்ளது?

a) புலி - டைகிரிஸ் சிற்றினம் b) கணவாய் மீன் - மெல்லுடலிகள், வகுப்பு
c) மனிதன் - உயர் விலங்கினம், குடும்பம் d) வீட்டு ஈ - மஸ்கா, வரிசை

89. உயிரின் வகைப்பாட்டின் கொள்கைகள் மற்றும் செயல்முறைகளைப் பற்றி விவரிக்கினற அறிவியலின் ஒரு கிளை இவ்வாறு அழைக்கப்படுகிறது.
a) அமைப்பியல் b) உடற்கூறியல் c) தொகுப்பு முறையியல்
d) உயிரணுவியல்

90. மனிதன் சார்ந்துள்ள பேரினம்
a) கொலம்பா b) ரானா c) மஸ்கா d) ஹோமோ

91. ஹெர்பேரியம் தாளின் சர்வதேச அளவு?
a) 41 x 29 செ.மீ b) 40 x 30 செ.மீ c) 39 x 28 செ.மீ d) 43 x 28 செ.மீ

92. 70 s ரைபோசோம் இந்த நுண்ணுறுப்பில் காணப்படுகிறது.
a) பசுங்கணிகம் b) புரோகேரியோட்டுகள் c) மைட்டோகாண்ட்ரியா
d) இவை அனைத்தும்

93. சரியாகப் பொருந்திய இணைகளைக் கண்டறிக.
a) ஆக்டீனோமைசீட்கள்-தாமதித்த வெப்புநோய்
b) மைக்கோ பிளாஸ்மா - கழலைத் தாடை நோய்
c) பாக்டீரியங்கள் -நுனிக்கழலை நோய்
d) பூஞ்சைகள் - சந்தனக் கூர்நுனி நோய்

94. கீழ்க்கண்டவற்றுள் எந்த பண்பு உயிருள்ளவைகளுக்கு மிக முக்கியமானது?
a) தனித்தன்மையான வளர்சிதை மாற்ற செயல்முறைகள்
b) உட்புறமாக மட்டும் வளர்ச்சி அதிகரித்தல்
c)
சுற்றுசூழலில் நடைபெறும் நிகழ்வுகளை நுகர்தல் மற்றும் அவற்றை நினைவு கூறும் திறன்
d)
மேற்புறத்தில துகள்கள் கூட்டமாக படிவதால் ஏற்படும் உட்புற மற்றும் வெளிப்புற வளர்ச்சி அதிகரித்தல்

95. ஒரு செல் உயிரினங்களுக்கு எடுத்துக்காட்டு
a) பிளனேரியா b) என்டோ அமீபா c) கோவேறு கழுதை
d) வேலைக்கார தேனீக்கள்

96. கீழ்க்கண்டவற்றுள் எந்த விதிகள் இரு பெயரிடுதல் முறையில் பொருந்தாது?
a)
பெயர்கள் லத்தீன் மொழியில், வலம் சாய்ந்த சிறு எழுத்துக்களாக எழுதப்பட வேண்டும்
b)
அறிவியல் பெயர்கள் கையினால் எழுதப்படும் பொழுது பேரினமும் சிற்றினமும் தனித்தனியே அடிக்கோடிடப்பட வேண்டும்
c) அறிவியல் பெயர்களை எந்த மொழியிலும் எழுதலாம்
d)
அறிவியல் பெயரில் முதல் வார்த்தை பேரினத்தையும், இரண்டாவது வார்த்தை சிற்றினத்தையும் குறிக்கும்

97. தக்காளிக்கு உருளைக்கிழங்கிற்கும் இடையே காணப்படும் பொதுவான பண்புகள் எந்த படிநிலையில் பெரும்பான்மையாக வைக்கப்படும்?

a) குடும்பம் b) வரிசை c) பிரிவு d) பேரினம்

98. பூமியில் முதலில் தோன்றிய உயிரினங்கள்
a) ஒளி உணவாக்கிகளும் b) இரசாயன உணவாக்கிகளும்
c) இரசாயன பிற ஊட்ட உயிரிகள் d) கேசெர்வேட்ஸ்

99. ஐந்து உயிரிலகு கோட்பாட்டை அறிமுகப்படுத்தியவர்
a) எச்லர் b) விட்டேக்கர் c) எங்லர் d) பெந்தம்

100. லின்னேயஸ் வெளியிட்ட புத்தகத்தின் தலைப்பு
a) சிஸ்டமா நேச்சுரே b) ஜெனிரா பிளான்டாரம் c) சிற்றினத் தோற்றம்
d) ஹிஸ்டரி ஜெனரலிஸ் பிளான்டரம்